பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 26 வெள்ளிக்கிழமை 12.08.2022 கதிர் 168

## உறவுகளைத் தேடியவர்களில் இதுவரை 121 பேர் உயிரிழப்பு

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிப் போராட்டம் மேற்கொண்டவர்களில் இதுவரை 121 பேர் உயிரிழந்துள்ளனர் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியலைந்து பல துன்பங்களையும், துயரங்களையும் சுமந்து ☞2

# இராணுவத்திடம் ஒப்படைத்த எம் பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ்தான் பதில் என்றால் அவர்களைக் கொலை செய்தவன் யார்?

### இரண்டாயிரம் நாளைக் கடக்கும் தொடர் போராட்டம்



**காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று இரண்டாயிரம் நாளைக் கடந்து செல்கின்ற நிலைமையில் கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்றலில் மாபெரும் போராட்டம் ஒன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டது.** ☞2

## சர்வகட்சி அரசை நிறுவ விமல் அணி நிபந்தனை



நாட்டை மீட்பதற்கான உரிய வழிகாட்டல்கள் அடங்கிய வேலைத்திட்டம் முன்வைக்கப்படுமானால் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கப்படும்.

- இவ்வாறு விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர எம்.பி. தெரிவித்தார்.

எனினும், தனி நபர்களைத் ☞2

## இருப்பிடமின்றி நாடு நாடாக அலைகின்றார் கோட்டாபய!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் மக்கள் தன்னை ஆதரித்து வாக்களித்தனர் என்று வீறாப்புப் பேசி வந்த கோட்டாபய ராஜபக்ஷ இறுதியில் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார். அதுமட்டுமன்றி இருப்பிடம் இல்லாமல் ஒவ்வொரு நாடு நாடாக அலைகின்றார்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்மாதம் 11ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இலங்கை வருவார் என்றும், ☞2

## இறுதி முடிவு எடுப்பதில் சஜித் அணி தடுமாற்றம்



சர்வகட்சி அரசுக்கு எந்த அடிப்படையில் ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். ☞2

## நவீன், லக்ஷ்மனுக்கு ஆளுநர் பதவி?





முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவை மத்திய மாகாண ஆளுநராக நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.

குறித்த பதவியை ஏற்பதற்குத் தயார் நிலையில் இருக்குமாறும், தற்காலிகமாகவேனும் இப்பதவியை ஏற்று நாட்டுக்கு சேவையாற்றுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ☞2

## ரணில் விரித்துள்ள வலையில் விலைபோகும் சிலர் சிக்குவர்

### இப்படிக் கூறுகின்றது ஜே.வி.பி.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரித்துள்ள சர்வகட்சி அரசு எனும் வலையில், விலைபோகும் சில அரசியல்வாதிகள் நிச்சயம் வீழ்வார்கள்.

- இவ்வாறு ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- ☞2

## வடக்கு வருகிறார் கல்வி அமைச்சர்

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று, அடுத்த வாரம் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. ☞2

## இலங்கையில் கோட்டா வசிக்க உரிமையுண்டு; வலியுறுத்தி ஆணைக்குழுவில் மனுத்தாக்கல்!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு வருவதற்கு, அவரது அடிப்படை உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்று மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் சமூக ஆர்வலர் ஓல ஹேரத் என்பவரினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி இலங்கையின் பல்வேறு ☞2

## கொழும்புத்துறைமுகத்தில் பாகிஸ்தான் போர்க்கப்பல்



பாகிஸ்தானின் ஏவுகணை தாங்கிய போர்க்கப்பலான தைமூர் கொழும்புத் துறைமுகத்தை இன்று வந்தடைந்துள்ளது.

சீனாவில் கட்டமைக்கப்பட்ட தைமூர் என்ற இந்தக் கப்பல், ஷாங்காய் ☞2

## அம்பாந்தோட்டைக்குச் சீனக் கப்பல் வருமா?

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருத்து



சீனக் கப்பல் இன்னமும் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்கவில்லை. அது இலங்கைக்கு வருமா என்பது தொடர்பில் உறுதியாக எதுவும் தெரிவிக்க முடியாது.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வடக்கு வருகிறார் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கல்வி அமைச்சின் செயலர் எம்.என்.ரணசிங்க மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மூத்த பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோருடன் கல்வி அமைச்சின் அதிகாரிகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதலைவர், உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரே எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சிக்கும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

18 ஆம் திகதி வியாழக்கிழமை, முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி, அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியின் வைபவ ரீதியான திறப்பு விழா இடம்பெறவுள்ளது. அரசின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 525 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியைக் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த திறந்து வைக்கவுள்ளார்.

மறுநாள் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்திலும் கட்டடமொன்றைக் கல்வி அமைச்சர் திறந்து வைக்கவிருக்கிறார். அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர், ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர், நிதியாளர் மற்றும் பீடாதிகளுடன் கலந்துரையாடவுள்ள இந்தக் குழுவினர், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகக் கல்வியின் இன்றைய நிலை மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளனர்.

## நவீன், லக்ஷ்மனுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன், மேல் மாகாணசபை ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நியமிக்கப்படவுள்ளார். இவர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இருப்பிடமின்றி நாடு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய சலுகைகள் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்த 'மொட்டு' அணியினர் வாயடைத்து நிற்க, கோட்டாபய தாய்லாந்து நாட்டின் காலடியில் தற்போது விழுந்துள்ளார். அங்கும் அவர் 3 மாதங்களுக்கு மேல் தங்கியிருக்க முடியாது.

அவர் இனி எந்த நாட்டின் காலடியில் விழப்போகின்றார் என்பதை 'மொட்டு'க் கட்சியினரிடம் கேட்க விரும்புகின்றேன்.

நாட்டைவிட்டு ஓடிய கோட்டாபய, இனி நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்க முடியாது. அவர் மீண்டும் இலங்கை வந்தால் மென்மேலும் அவமானங்களைச் சந்திக்க வேண்டி வரும். மக்களை வாட்டி வதைத்த கோட்டாபய, இன்று உலக அரங்கில் அவமானப்பட்டு நிற்கின்றார் - என்றார்.

## ரணில் விரித்துள்ள ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமது அணியில் இருந்து பிரிந்து சென்றவர்களை வளைத்துப் போடுவதற்காக அமைச்சுப் பதவி குறித்து ரணில் பேரம் பேசி வருகின்றார். அத்துடன், ஊழல், மோசடிகளைக் காட்டி, 'மொட்டு'க் கட்சியினரின் ஆதரவையும் திரட்டியுள்ளார்.

உரிய நேரம் வரும்போது விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, ரத்தன தேரர் போன்றவர்களும் ரணிலின் பிடிக்குள் சிக்குவார்கள். ஆளுங்கட்சி பக்கம் சாய்ந்துவிட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமும்கூட.

இப்படியான அரசியல் நிகழ்ச்சி நிரல் கொண்ட அரசில் நாம் எப்படி இணைவது? எந்த அடிப்படையில் ஆதரவு வழங்குவது? - என்று கேள்வி எழுப்பினார்.

## இறுதி முடிவு எடுப்பதில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்றிரவு நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசுக்கான உத்தியோக பூர்வ அழைப்பு இன்னும் விடுக்கப்படவில்லை. எனினும், அமைச்சுப் பதவிகளை மட்டும் இலக்காகக்கொண்ட அரசாக அது அமையக்கூடாது. நாம் அமைச்சுப் பதவிகளைப் பெறப்போவதும் இல்லை.

எனினும், சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். அரசின் நடவடிக்கையில் வெளிப்படைத்தன்மை இருந்தால் மாத்திரமே அந்த ஒத்துழைப்பு வழங்கப்படும். தற்போதுவரை அந்த வெளிப்படைத்தன்மையைக் காணமுடியவில்லை. நாமும் இறுதி முடிவை எடுக்கவில்லை - என்றார்.

## சர்வகட்சி அரசை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திருப்திப்படுத்தவும், அமைச்சுப் பதவிகளுக்காகவும் சர்வகட்சி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் கூறினார்.

## உறவுகளைத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வயோதிபக் காலங்களில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளிலும், ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் பலர் இருந்து வருகின்றனர் என்றும் அவர்கள் மேலும் கூறினர்.

## மரணச் சான்றிதழ்தான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடத்தப்பட்ட மற்றும் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி அவர்களுடைய உறவுகள் கடந்த 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த காலம் முதல் தொடர்ச்சியாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்

இவ்வாறான பின்னணியில் தமக்கான நீதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்து சர்வதேச நீதியை வேண்டி கடந்த 2017ஆம் ஆண்டு முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் தொடர் போராட்டங்களை ஆரம்பித்திருந்தனர். அவ்வாறு கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனவீர்ப்புப் போராட்டமானது இன்று இரண்டாயிரம் நாளை எட்டியுள்ளது

இந்நிலையில், சர்வதேச விசாரணையை வலியுறுத்தி இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டமானது கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலில் ஆரம்பமாகி டிப்போ சந்தி வரை பேரணியாகச் சென்றது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகள், 'எங்கே எங்கே உறவுகள் எங்கே?', 'வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்,' 'வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும்', 'இராணுவத்திடம் ஒப்படைத்த எம் பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ்தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்?', 'உங்கள் இராணுவத்தை நம்பிக் கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டனர்?', 'கொடுப்பனவுகளைக் கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவா?', 'கொலைசெய்த தரப்பால் நீதி வழங்க முடியுமா?', 'எங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது?' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்

## அம்பாந்தோட்டைக்குச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சீனாவின் 'யுவான் வாங் 5' கப்பல் இன்னமும் இலங்கைக் கடற்பரப்புக்குள் பிரவேசிக்கவில்லை. அது சர்வதேசக் கடற்பரப்பில் தரித்து நிற்கின்றது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் குறித்த கப்பல் வருமா என்பது தொடர்பில் எம்மால் உறுதியான பதில் எதுவும் வழங்க முடியாதது. ஏனெனில் இரு நாட்டு அரசுகளும் இந்தக் கப்பல் விவகாரம் தொடர்பில் தீவிர பேச்சில் ஈடுபட்டுள்ளன - என்றார்.

## இலங்கையில் கோட்டா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடங்களில் மறைந்திருந்து மாலைதீவுக்குச் சென்று அங்கிருந்து சிங்கப்பூர் சென்று தாய்லாந்தில் பாதுகாப்புக் கோர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் பிரஜையும், முன்னாள் முதற் குடிமகனுமான அவருக்கு இலங்கையில் சுதந்திரமாக வசிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஓல ஹேரத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறினாரா அல்லது சதி காரணமாக நாடு கடத்தப்பட்டாரா எனக் கண்டறியக் கோரி கடந்த ஜூலை 18ஆம் திகதி பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் தெளிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது போராட்டத்திலிருந்து விலகியுள்ளனர் என்றும், இது தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## கொழும்புத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நகரிலிருந்து கராச்சிக்குச் செல்லும் வழியில் கொழும்புக்கு நல்லெண்ண நோக்கில் பயணித்துள்ளது.

இந்தப் போர்க்கப்பல் கம்போடிய மற்றும் மலேசிய கடற்படைகளுடன் பயிற்சிகளை நடத்திய நிலையிலேயே கராச்சி திரும்புகின்றது.

ஷாங்காயில் உருவாக்கப்பட்ட இந்தக் கப்பல், கராச்சிக்கு தமது முதல் பயணத்தை மேற்கொள்கின்றது.

கராச்சியில் பாகிஸ்தான் கடற்படையில் இணைவதற்குச் செல்லும் வழியில் கொழும்புத் துறைமுக அழைப்பை ஏற்று, பாகிஸ்தானின் இந்த ஏவுகணைப் போர்க்கப்பல், இலங்கை வந்துள்ளது.

இந்தக் கப்பலைக் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட, இலங்கை அரசு கடந்த சில தினங்களுக்கு முன்னர் அனுமதிவழங்கியது. எனினும், பங்களாதேஷ் அந்தக் கப்பலுக்கு அனுமதி மறுத்துள்ளது.

இந்தக் கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே சீனாவின் கப்பல் ஒன்று அம்பாந்தோட்டைக்கு வரும் பயணத்தால் இந்தியாவின் எதிர்ப்பால் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இராஜதந்திர முறுகலை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புரிய மறுக்கும் உண்மை

நாட்டின் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களை நாடாளுமன்றத்தில் வரிசைப்படுத்தி உரையாற்றிய சிரேஷ்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விடுதலைப் புலிகளின் தாக்குதலால் நாடு கண்ட பின்னடைவுகள் மிக மிக மோசம் என்றார்.

“நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ளமைக்குப் பல காரணங்கள் உள்ளன. இதற்கு முன்னாள் அதிபர் மீதும், தற்போதைய அதிபர் மீதும் குற்றம் சுமத்திப் பயனில்லை. 30 ஆண்டுகளாக நாட்டில் இருந்த புலிகளின் பயங்கரவாதம் இந்த பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்பது எவருக்கும் நினைவில் இல்லை.

“புலிகளின் தாக்குதல்களின் பாரதூரம் எந்தளவுக்கு இருந்தது என்றால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது 1.5 என்ற வீதத்திற்கு வீழ்ச்சியடைந்த காலம் அதனால் ஏற்பட்டிருந்தது. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீது பாரிய தாக்குதல் நடத்தினர். கொலன்னாவ எண்ணெய் தாங்கிகள் மீது தாக்குதல் நடத்தினர். இலங்கை மத்திய வங்கியின் மீது தாக்குதல் நடத்தினர். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள், மத வழிப்பாட்டுத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தினர். ஸ்ரீமஹாபோதி, தலாத மாளிகை, கொழும்பு கலதாரி ஹோட்டல் போன்றவற்றின் மீது தாக்குதல் நடத்தினர்.

“அன்று மிகவும் பயங்கரமான நிலைமை காணப்பட்டது. 1980 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளின் தாக்குதல் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப் பெரிய அழிவு ஏற்பட்டது.” – என்று அவர் விவரித்தார்.

அவர் கூறியவை உண்மைதான். இதில் மறுப்பதற்கு எதுவுமில்லை. விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் ஏற்பட்ட பேரழிவுகள் நாட்டுக்கு ஒரு புறம் என்றால், அவர்களுடனான யுத்தத்தில் வெல்வதற்காக கொழும்பு பட்ட கடன்களின் பளு இன்னும் அதிகமானது.

இன்று ஒன்று திரண்டு நாட்டின் கழுத்தை அழுத்தும் வெளிநாட்டுக் கடன் கடப்பாட்டின் ஆரம்பமே – அத்திபாரமே – யுத்தத்துக்காக வாங்கிய அந்த பெரும் கடன்கள்தான். அப்போது பெற்ற கடன்களின் தவணைப் பணத்தைக் கட்டுவதற்கு, அவ்வப்போது பெற்ற புதிய கடன்களும் சேர்த்துதான் இன்று நாட்டை இந்த நெருக்கடிக்கு நிலைக்குள் தள்ளி நிற்கின்றன். அது உண்மைதான்.

புலிகள் தொடுத்த யுத்தத்தின் விளைவுகள் பற்றி குறைபட்டுக் கண்டிக்கும் பாணியில் கருத்து வெளியிடும் அவர் போன்ற மூத்த சிங்களத் தலைவர்கள், புலிகள் – தமிழர்கள் – அப்படி ஒரு யுத்தத்தை முன்னெடுப்பதற்கான காரணம் – இழைக்கப்பட்ட அநீதி – எங்கிருந்து தொடங்கியது என்பதை இன்னும் கூட – இன்றும் கூட – சிந்திக்க தயாரில்லை என்பதுதான் இதில் பெரும் துன்பியல் அம்சமாகும்.

இந்த இலங்கை தீவின் தேசிய இனம் ஒன்றுக்குரிய – வரலாற்றுக்காலப் பிறப்புரிமையை அங்கீகரிக்க மறுத்து, அதனை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்துவதற்கு பௌத்த, சிங்கள பேரினவாதம் முன்னெடுத்த திமிர்த்தனமான போக்கே, இந்த அளவு பேரழிவுக்கும் வித்திட்டது.

அந்த மூல விடயத்தை மறந்து, இடையில் வந்த விளைவுகளை ஒட்டி நொந்து கொண்டிருப்பதால் பயன் கிட்ட போவதில்லை. துயரே தொடரும். உண்மையைப் புரிந்து ஏற்றுக் கொண்டு, நீதியை நிலைநிறுத்த இனியாவது சிங்களம் இறங்கி வரவேண்டும்.

# 12 திட்டங்களின் நிதியளிப்பை திடீரென நிறுத்திய ஜெய்க்கா!

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தகவல்



ஜப்பானிய சர்வதேச நிதியமான ஜெய்க்கா, இலங்கையில் நிதியளித்து வந்த 12 திட்டங்களுக்கான தமது நிதியளிப்பை நிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அந்த நிதியம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த இரண்டாவது முனைய விஸ்தரிப்புக்காக ஜப்பானிய தாய்சேய் நிறுவனத்துக்கான நிதியை ஜெய்க்கா நிறுத்தியதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் நாடாளுமன்றில் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஜெய்க்கா நிறுவனம், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஜப்பானின் 12 திட்டங்களுக்கான நிதியை ரத்துச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இலங்கை, சர்வதேச நாடுகளில் இருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தப்போவதில்லை என்று அறிவித்திருந்த நிலையிலேயே ஜெய்க்கா நிறுவனம், இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எனினும் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டுக்கு வரும் வரையிலேயே இந்த நிதி தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ஜெய்க்கா நிதியம் அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்

# இந்திய உதவியுடன் வீடமைப்புத் திட்டங்கள் தெற்கிலும், வடக்கிலும் துரிதப்படுத்தப்படும்!

## பிரசன்ன ரணதுங்க தகவல்

கொழும்பு, ஒக. 12

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் உத்தரவிற்கு அமைய தெற்கிலும் வடக்கிலும் இந்திய உதவியுடன் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்கள் துரிதப்படுத்தப்படவுள்ளன என அறியமுடிகின்றது.

அதற்கமைய அம்பாந்தோட்டையில் 24 வீடமைப்புத் திட்டங்களும் மாத்தறையில் ஒன்றும் மேற்கொள்ளப்படுகின்றதோடு அம்பாந்தோட்டையில் மேலும் 26 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், தெற்கில் நிர்மாணிக்கப்படவுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 1,200 ஆகும்.

இந்தத் திட்டங்களுக்காக இந்தியாவிலிருந்து 60 கோடி ரூபா பெறப்பட உள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொத்த திட்டங்களின் எண்ணிக்கை 24 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நான் பணப் பெட்டிகளுக்கு ஆசைப்பட்டவன் என்றால் இருதடவை மாவைக்கு தேசியப்பட்டியல் வழங்கியிரேன்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரும்பாதவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணையலாமாம்!

## ஆனந்தசங்கரி பகிரங்க அழைப்பு




நான் பணப்பெட்டிகளுக்கோ சுகபோகத்துக்கோ ஆசைப்பட்டவன் அல்லன். அவ்வாறு இருந்திருந்தால் இரு தடவைகள் மாவை சேனாதிராசாவுக்கு தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்கியிருக்க மாட்டேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி இருக்கும் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர்கள் விரும்பினால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து பயணிக்கலாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களிடமிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கு குறைந்து கொண்டே செல்கின்றது.

இதனை நான் கூறவில்லை அண்மை காலங்களில் இடம் பெற்ற தேர்தல் முடிவுகள் இதனை நன்கு உணர்த்துகின்றன.

தமிழ் மக்களுக்காக உண்மையை உரத்துக் கூறி பண பெட்டிகளுக்கு விலை போகாத தந்தை செல்வாவால் வழிநடத்தப்பட்ட பழம் பெரும் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி என்பதை யாரும் மறக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு விடயங்களை தாமே நிறைவேற்றப்போகிறோம் எனக் கூறிவரும் தலைவர் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் இதுவரை தமிழ் மக்களுக்காக எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

இறுதியுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது மூன்று லட்சம் பேர் வன்னி யுத்த பூமியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறியவன் நானே.

இறுதி யுத்தத்தில் உயிர் சேதங்கள் ஏற்படப் போகின்றன எனத் தெரிந்தும் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்கு வருமாறு சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்தபோது எவரும் முன்வரவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பஸில் ராஜபக்ஷவை சந்திக்கச் சென்ற போது ஆனந்த சங்கரி சொல்லித்தான் எமக்கு மூன்று லட்சம் பேர் அங்கு அகப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிய வந்ததாக பஸில் கூறினார்.

பஸில் ராஜபக்ஷ இப்போதும் இலங்கையில் தான் இருக்கிறார். அவர் அவ்வாறு சொல்லவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் பஸில் ராஜபக்ஷவை சந்தித்தவர்கள் கூறுவார்கள் ஆயின் நான் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன்.

நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரைப் போன்று குடு விற்கவில்லை, பணப்பெட்டி வாங்கவில்லை, கொலை செய்யவில்லை.

எனக்கு ஒரு பணப்பெட்டி கிடைத்தது. அதுவும் நான் செய்த பணிக்காக வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அதனை வழங்கியது. அதுவே எனக்குக் கிடைத்த பணப்படியாகும்.

ஆகவே பணத்துக்காக – பதவிக்காக – தமிழ் மக்களை என்றும் நான் விற்றவனல்லன். அவ்வாறு ஆசை இருந்தவனாக இருந்திருந்தால் இரண்டு தடவைகள் தேசியப் பட்டியல் மூலம் மாவை சேனாதிராசாவை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி இருக்க மாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆப்கானில் தற்கொலை படைத் தாக்குதல்; தலிபான் மதகுரு உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. அவர்கள் வீதிகளில் துப்பாக்கியுடன் சுற்றி திரிந்த போதிலும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஒரு பள்ளியில் நேற்று தற்கொலை படை தாக்குதல் நடந்தது. இதில் அங்கிருந்த தலிபான் மத குருவான ஷேக் ரஹி முல்லா என்பவர் உயிரிழந்தார்.

இதனை துணை செய்தி தொடர்பாளர் பிலால் கரிமி உறுதிப்படுத்தி உள்ளார்.

இந்த தற்கொலை படை தாக்குதலில் ஈடுபட்டவர் ஏற்கனவே தனது காலை இழந்தவர். அவர் செயற்கைக் காலை பொருத்தி இருந்தார்.

அவர் எந்த அமைப்பைச் சேர்ந்தவர் என தெரியவில்லை. இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. தாக்குதலுக்கான முழுமையான காரணம் என்னவென்று தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.



## துப்பாக்கியுடன் வந்த நபரை சுட்டுக்கொன்ற அதிகாரிகள்

அமெரிக்க புலனாய்வு அமைப்பான FBI அலுவலகத்தில் துப்பாக்கியுடன் புகுந்த நபரை அதிகாரிகள் சுட்டுக் கொன்றனர்.

ஓஹியோவில் உள்ள எவ்.பி.ஐ. அலுவலகத்தில் பலத்த பாதுகாப்பை மீறி கையில் துப்பாக்கியுடன் மர்ம நபர் ஒருவர் புகுந்ததால் நீண்டநேரமாக அங்கு பதற்றம் நிலவியது. பின்னர் அந்த நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் யார் என்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புளோரிடாவில் முன்னாள் அதிபர் ட்ரம்ப் வீட்டை எவ்.பி.ஐ. அதிகாரிகள் சோதனையிட்டதால் அவர்களைக் கொல்லப் போகிறேன் என அந்த நபர் சமூக ஊடகத்தில் மிரட்டல் விட்டார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

## முறைகேடு பற்றி அட்டார்னி ஜெனரல் விசாரணை ட்ரம்ப் ஒத்துழைப்பு அளிக்க மறுப்பு தெரிவிப்பு

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், கடன்கள் மற்றும் வரிச்சலுகைகளைப் பெறுவதற்காக தனது சொத்துக்களின் மதிப்பு குறித்து அதிகாரிகளை தவறாக வழி நடத்தினார் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக மேன்ஹட்டனில் உள்ள நியூயோர்க் மாகாண அட்டார்னி ஜெனரல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணைக்கு ட்ரம்ப் நேரில் ஆஜரானார்.

சுமார் 4 மணி நேரம் நடந்த விசாரணையின் போது, அட்டார்னி ஜெனரல் எழுப்பிய ஒவ்வொரு கேள்விக்கும் ஒரே பதில் என்று ட்ரம்ப் கூறிக் கொண்டு, ஒத்துழைப்பு அளிக்க மறுத்து விட்டார் என தகவல்கள் கூறுகின்றன.

இந்த விசாரணையை சூனிய வேட்டை என விமர்சித்த ட்ரம்ப், நியூயோர்க் அட்டார்னி ஜெனரல் லெட்டிடியா ஜேம்ஸ் மற்றும் தன்னிடம் நடந்த விரிவான விசாரணையை கடுமையாக சாடி அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் அவர், பல வருட உழைப்பும், கோடிக்கணக்கான டொலர்களும் கொதித்துக்கொண்டிருக்கிற இந்த நீண்ட தொடர்கதைக்காக செலவழிக்கப்பட்டும் எந்தப் பலனும் இல்லை.



அமெரிக்க அரசியல் சாசனத்தின்கீழ் ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்படும் உரிமைகள் மற்றும் சலுகைகளின் கீழ் உள்ள கேள்விகளுக்கு பதில் அளிக்க நான் மறுத்து விட்டேன் என தெரிவித்துள்ளார். அட்டார்னி ஜெனரல் ஜேம்ஸ் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், ட்ரம்பிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவர் 5ஆவது திருத்த உரிமையை தன் மீதான குற்றச்சாட்டுக்கு எதிராக பயன்படுத்தினார். அட்டார்னி ஜெனரல் ஜேம்ஸ், எங்கு வழிநடத்தினாலும் உண்மைகளையும் சட்டத்தையும் பின்பற்றுவார். எங்கள் விசாரணை தொடர்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாதிக்கு சீனா ஆதரவு; இந்தியா கடும் கண்டனம்



சர்வதேச பயங்கரவாதியான மசூத் அசாரின் சகோதரர் அப்துல் ராப்புக்கு தடை கொண்டு வர ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியா, அமெரிக்க நாடுகள் முயற்சி மேற்கொண்டன. இந்த முயற்சிக்கு ஆதரவாக 14 நாடுகள் முன்வந்தன. ஆனால், சீனா இந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டது.

இந்தியா, அமெரிக்கா கொண்டு வந்த திட்டத்தை செயல்படுத்தவிடாமல் தனது வீட்டோ அதிகாரத்தால் தடுத்து நிறுத்தியது.

இதேபோல், கடந்த ஜூனில் நடந்த ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கூட்டத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதி அப்துல் ரஹ்மான் மக்கி என்பவரை தடுப்பு பட்டியலில் சேர்க்க இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவை கூட்டாக பரிந்துரை செய்தன. இந்தப் பரிந்துரையையும் சீனா கடைசி நேரத்தில் நிறுத்திவைத்தது.

இதற்கு முன்னரும் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் சிலரை தடுப்புப் பட்டியலில் சேர்க்க இந்தியா கோரியபோது சீனா முட்டுக்கட்டை போட்டது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்ஸில் கூட்டம் இந்த மாதம் சீனா தலைமையில் சமீபத்தில் நடந்தது. அதில் ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் பேசியதாவது:

பயங்கரவாதிகள் மீதான தடுப்பு நடவடிக்கையை எவ்வித நியாயமான காரணங்களும் இன்றி நிறுத்தி வைப்பது முடிவுக்கு வரவேண்டும். தடுப்பு கமிட்டி வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும். உலகின் மிக மோசமான சில பயங்கரவாதிகளை தடுப்பு பட்டியலில் சேர்க்க அளிக்கப்பட்ட பரிந்துரை முறையான காரணமின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற இரட்டை நிலைகள் தடை விதிக்கும் கவுன்ஸிலின் நம்பகத்தன்மையை குலைத்துவிடும். சர்வதேச பயங்கரவாதிகளுக்கு எதிராக நாம் போராடும்போது ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் உறுப்பினர்கள் ஒரே குரலை வெளிப்படுத்துவர் என நம்புகிறேன் என தெரிவித்தார்.

# கொரோனாவுக்கு எதிரான போரில் வடகொரியாவுக்கு அமோக வெற்றி

## அதிபர் கிம் ஜாங் உன் தகவல்

உலகை அச்சுறுத்திய கொரோனா, வடகொரியாவிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

வடகொரியாவில் கொரோனா நோயினை அங்குள்ள சுகாதாரத்துறையினர், சாதாரண காய்ச்சல் என்றே பதிவு செய்தனர். இதனால் இங்கு கொரோனா இறப்பு குறித்து தெளிவான தகவல் எதுவும் வெளியாகவில்லை என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்து இருந்தது.

இந்நிலையில் கடந்த மே மாதம் இங்கு ஒமிக்ரோன் பாதிப்பும் ஏற்பட்டதாக தகவல் வெளியானது. தலைநகர் பியோங்யாங்கில் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

கொரோனா மற்றும் ஒமிக்ரோன் பாதிப்பை கட்டுப்படுத்த வடகொரியாவின் சுகாதாரத்துறையினர், நோய் தடுப்பு விஞ்ஞானிகளுடன் இணைந்து செயல்பட்டனர்.

இதில் கொரோனா பாதிப்பு முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டதாக வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் நேற்று தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:–

வடகொரியாவில் கொரோனாவுக்கு எதிராக நடந்த போரில் அமோக வெற்றி பெற்றுள்ளோம். நாட்டு மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையும், விடா முயற்சியுமே இந்த வெற்றிக்கு காரணம்.

இதற்கு காரணமானவர்களை பாராட்டுகிறேன்.



இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் அவர் சுகாதார பணியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுடன் அமர்ந்து படமும் எடுத்துக் கொண்டார்.

# பூரண மதுவிலக்கை அமுல்படுத்தாதது ஏன்?

# தி.மு.க. அரசிடம் விஜயகாந்த் கேள்வி



தமிழகத்தில் போதை மருந்து நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி, அதனை விற்பனை செய்பவர்களை கைது செய்ய வேண்டும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். போதைப் பொருளை தடுக்க தவறும் பொலிஸ் அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். முதல்வரின் நடவடிக்கை தொடர்பாக அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்துவருகின்றனர்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவின் தூண்களாக இருக்கும் இளைஞர்கள், பாடசாலை, கல்லூரி மாணவ-மாணவிகள் கஞ்சா, குட்கா, மது உள்ளிட்ட போதைப்பொருள்களுக்கு அடிமையாகி வருகின்றமை மிகுந்த வேதனை அளிக்கிறது. புழக்கத்தில் இருக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை அரசு இரும்புக்கரம் கொண்டு ஒழிக்க வேண்டும், என்று தெரிவித்திருக்கிறார்.

ஆட்சியில் அ.தி.மு.க. இருந்தபோது பூரண மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்திய தி.மு.க., 2021 தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தபிறகு தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமுல்படுத்தாதது ஏன்?, என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்களை ஒழிக்க வேண்டும் என கூறும் தமிழக அரசு, டாஸ்மாக் கடைகளையும் படிப்படியாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். கஞ்சா, மது பானங்களை முற்றிலும் ஒழிக்க வேண்டும். மேலும், போதை இல்லாத பாதையில் இன்றைய இளைஞர்களை வழிநடத்திச் செல்ல வேண்டியது தமிழக அரசின் கடமை, என்றும் விஜயகாந்த் தனது அறிக்கையில் வலியுறுத்தியிருக்கிறார்.

## துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர்



இந்தியத் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடுவின் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து, புதிய துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் கடந்த 6ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கடந்த 7ஆம் திகதி தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர் அனுப் சந்திர பாண்டே ஆகியோர் கூட்டாக புதிய துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான சான்றிதழில் கையெழுத்திட்டனர்.

பதவிக்காலம் முடிவடைந்த வெங்கையா நாயுடு,நேற்று நாடாளுமன்ற மேல்சபை அதிகாரிகளைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். வெங்கையா நாயுடுவோடு 5 ஆண்டு காலம் பணியாற்றிய அதிகாரிகள் அவருடைய பணிக்காலத்தில் நெருங்கிப் பழகியதை நினைவு கூர்ந்தனர். இதையடுத்து நாடாளுமன்ற வளாகத்தில் தனது நினைவாக சீதா அசோக மரக்கன்றை வெங்கையா நாயுடு நாட்டினார். நாடாளுமன்றக் கட்டடத்தின் முற்றப் பகுதியிலும் அசோக மரக்கன்றையும் நட்டு, அவர் விடைபெற்றார்.

இதையடுத்து, இந்தியாவின் 14 ஆவது துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் நேற்று பதவி ஏற்றுள்ளார். டெல்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜெகதீப் தன்கருக்கு, ஜனாதிபதி திரௌபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவி ஏற்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடியும் மத்திய மந்திரிகளும் கலந்து கொண்டனர். அவர் நாடாளுமன்ற மேல்சபைத் தலைவராக இருந்து, நாடாளுமன்ற மேல்சபையைத் தலைமை தாங்கி நடத்துவார்.

## பொது இடங்களில் முகக்கவசம் அணியாதோருக்கு 500 ரூபா அபராதமென டெல்லி அரசு அறிவித்தது



இந்தியாவில் இதுவரை 4 கோடியே 42 லட்சத்து 6 ஆயிரத்து 996 நபர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெல்லியில் மட்டும் இன்று சுகாதாரத்துறை அறிக்கையின்படி, 2,146 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

தினந்தோறும் கொரோனாப் பரவல் அதிகரித்து வருவதைத் தடுக்க டெல்லி அரசு, மக்களின் நலனைக் கருதி பொது இடங்களில் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இதை மீறினால் 500 ரூபா அபராதம் விதிக்கப்படும் என்றும் டெல்லி அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பின் கீழ் உள்ள அபராதம், தனியார் நான்கு சக்கர வாகனங்களில் ஒன்றாகப் பயணிக்கும் நபர்களுக்கு பொருந்தாது, என தெரிவிக்கப்படுகிறது.

பொது இடங்களில் மக்கள் மிகவும் அஜாக்கிரதையாக, முகக்கவசம் அணியாமல் நடமாடுவதை அவதானித்துள்ள டெல்லி பேரிடர் மேலாண்மை ஆணையம், இந்த கட்டுப்பாட்டு முடிவை எடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



## பெண்களுக்காக டாஸ்மாக் கடைகளை மூடவேண்டும் தமிழக முதல்வருக்கு அண்ணாமலை கோரிக்கை

போதைக்கு அடிமையானவர்களில் மது பானத்தால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமென்பது தமிழக முதல்வருக்குத் தெரியாதமை ஆச்சரியமென, பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

போதைப்பொருள் நடமாட்டத்திற்கு துணை புரிவோர் மீது நடவடிக்கை எடுக்க சர்வாதிகாரியாக மாறுவேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரித்துள்ளார். போதைப்பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளின் சொத்துக்கள் முடக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். விற்பனை செய்யும் வியாபாரிகள் அனைவரையும் கைது செய்தாக வேண்டும் என்றும் முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். போதைப் பொருளால்தான் கொலை, கொள்ளை, பாலியல் தொல்லை உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் நடைபெற்று வருகின்றன என்று தமிழக முதல்வர் கூறியிருக்கிறார்.

இதுபோன்ற ஒரு விழிப்புணர்வுடன் கூடிய ஒரு விளக்கத்தைத்தான் நான் தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து எதிர்பார்த்தேன். போதைப் பழக்கத்தினால் ஏற்படும் தீமைகள் பற்றி இத்தனை விரிவாக இத்தனை தெளிவாக நம் மாநிலத்தின் முதல்வர் அவர்கள் அறிந்திருக்கிறார் என்பதை நினைக்கும்போது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது.

ஆனால், போதைப் பழக்கத்தின் தீமைகளைப் பற்றி தெளிவாக அறிந்த நம் முதல்வருக்கு மது பானம்தான் அதிக போதையைத் தருகிறது என்பதைப் பற்றிய தெளிவு இல்லாமல் இருப்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. தமிழகத்தில் போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கையில் மதுபானத்திற்கு அடிமையானவர்கள்தான் மிக அதிகம்.

உழைக்கும் வர்க்கத்தினர் அனைவரும், தாங்கள் அன்றாடம் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் டாஸ்மாக்கில் கொடுத்துவிட்டு, குடும்பத்தைக் கவனிக்காமல் தவிக்க விடுகின்றனர். தன் சொந்த உடல் நலத்தையும் குடும்பத்தின் நலத்தையும் கெடுத்து, வருங்காலத் தலைமுறைகளைப் படிக்கவிடாமல், மனோரீதியாக குழந்தைகள் பாதிக்கப்பட காரணமாக இருப்பது மதுப்பழக்கமே. முதல்வர் குறிப்பிட்ட கொலை, கொள்ளை, பாலியல் தொல்லைகள் ஆகியவற்றிற்கு மூல காரணம் மதுபானமே, என்று அண்ணாமலை தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்திலுள்ள பெண்களுக்கு தாலிக்கு தங்கம் கொடுக்கவில்லை, குடும்பத் தலைவிகளுக்கான உரிமை தொகையை கொடுக்கவில்லை, தங்க நகைக் கடனைத் தள்ளுபடி செய்யவில்லை, சிலிண்டருக்கு மானியம் கொடுக்கவில்லை. இப்படியெல்லாம் நலத்திட்ட உரிமைகள் தமிழகத்தில் பெண்களுக்கு வழங்கப்படவில்லை. அவர்களுக்கு நிம்மதியையாவது கொடுங்கள்.

அரசு தானாக முன்வந்து மதுக்கடைகளை மூடினால், தமிழகத்தில் உள்ள பெண்கள் எல்லோரும் நிம்மதி அடைவார்கள். குற்றங்கள் குறையும். தமிழகத்திலுள்ள மாணவர்களும் மாணவிகளும் மிக எளிதாக மதுபானங்களை வாங்கிப் பயன்படுத்திய காணொலிகள் சமூக ஊடகங்களில் காணக்கிடைக்கின்றன. வருங்கால சந்ததியைப் பாழாக்கி, குடிகெடுக்கும் மதுபானம் ஒரு கடுமையான போதைப்பழக்கம் என்பதை தமிழகத்தின் முதல்வர், ஏன் உணராதமை போல நடந்து கொள்கிறார்? என்றும் அண்ணாமலை தனதுஅறிக்கையில்கேள்வியெழுப்பியிருக்கிறார்.

குடும்பத் தலைவிகளுக்கான, பெண்களுக்கான, நலத்திட்டங்களைத்தான் நிறைவேற்ற மனமில்லையென்றாலும் குறைந்தபட்சம் டாஸ்மாக் கடைகளையாவது மூடுங்கள். குடும்பங்களையும் பெண்களையும் நிம்மதியாக வாழ வைக்கும் வகையில், தமிழக அரசு மதுபானக் கடைகளை மூடும் முடிவை எடுக்கும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் வேண்டுகோள் விடுக்கிறேன், என்று தனது அறிக்கையில் அண்ணாமலை கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மட்டக்களப்பில் மும்முரமாக சிறுபோக நெல் அறுவடை



மட்டக்களப்பு மாவட்டத்தில் 2022 இல் சிறுபோக நெற்செய்கை பண்ணப்பட்ட நெல் வயல்கள் தற்பொழுது துரிதமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் உள்ள 16 கமநல சேவை கேந்திர நிலையை பிரிவுகளில் சுமார் 32,260 ஹெக்டேயரில் நெற் செய்கை பண்ணப்பட்டதாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதி ஆணையாளர் கே.ஜெகன்நாத் தெரிவித்தார்.

அறுவடைக் காலம் தொடங்கி உள்ளபோதிலும் அறுவடைக்கு தேவையான எரிபொருளை அரசாங்கம் பெற்றுக் கொடுத்ததனால் குறித்த வேளைக்கு தமது நெல்லை அறுவடை செய்வதற்கு வசதி கிட்டியதாக இப்பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் பெரும்போக நெல் செய்கையின் போது தேவையான யூரியா உட்பட சகல வசதிகளையும் பெற்றுத் தருவதற்கு புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை



விடுக்கின்றனர்.

அறுவடை காலத்தில் அறுவடை செய்வதற்கு தேவையான எரிபொருளை பெற்றுத் தர நடவடிக்கை எடுத்தமைக்காக இந்த அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் நன்றி பாராட்டுவதாக விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

## மட்டு.சிறைக்கு புதிய அத்தியட்சகர்



(சுதா)

மட்டக்களப்பு சிறைச்சாலை வரலாற்றில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் சிறைச்சாலை அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அத்தியட்சகராக கடமையாற்றிய எஸ்.எல்.விஜயசேகர இடமாற்றம் பெற்றுச் சென்றதன் பின்னர் புதிய சிறைச்சாலை அத்தியட்சகராக நல்லையா பிராகரன் இலங்கை சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றிய இவர் அதே ஆண்டில் சுப்றா கிரோட்டில் சித்தியடைந்து, பதவியுயர்வு பெற்று, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் பிரதம ஜெயிலராக கடமையாற்றியுள்ளார்.

அதன்பின்னர் சிரேஷ்ட தரத்தை சேர்ந்த இவர் 2020 ஆண்டு இலங்கையில் பெரிய சிறைச்சாலையான தும்பறை மற்றும் போகம்பர ஆகிய சிறைச்சாலைகளில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றிய பின்னர் 2021 களில் வவுனியா சிறைச்சாலையில் உதவி அத்தியட்சகராக கடமையாற்றினார். இன்று 12 ஆம் திகதி முதல் மட்டக்களப்பு சிறைச்சாலையின் புதிய அத்தியட்சகராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் சிக்கிய போதைப்பொருள்கள்

## 1,100 போதை மாத்திரைகளுடன் மாவடிச்சேனையில் ஒருவர் கைது



போதை மாத்திரைகளுடன் 41 வயதுடைய சந்தேகநபரொருவர் ஓட்டமாவடி மாவடிச்சேனையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து சுமார் 1,100 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளமையுடன், இவர் ஓட்டமாவடி பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அவர்கள் வாழைச்சேனைப் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காரில் போதைப்பொருள் கடத்தினராம் 3 இளைஞர்கள் அம்பாறையில் கைது!

அம்பாறை பிரதேசத்தில் காரில் போதைப்பொருள் கடத்திய 3 இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் 26 மற்றும் 27 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபர்களிடம் இருந்து 17 கிராம் ஹெரோயின், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள், 20 கிராம் கஞ்சா ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த இளைஞர்கள் பன்னிபிட்டிய பிரதேசத்தில் இருந்து அம்பாறை பிரதேசத்திற்கு இந்தப் போதைப்பொருளைக் கொண்டு வந்



துள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



## போதைப்பொருளை வைத்திருந்த குடும்பஸ்தர் கிண்ணியாவில் கைது

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிண்ணியா - மட்டக்களப்பு வீதி, ரீ சந்தியில் வைத்து ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு, கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான நபர்களிடம் இருந்து 5.6 கிராம் நிறை கொண்ட ஹெரோயின் பொதி ஒன்று கைப்பற்றப்பட்டதாக போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். கிண்ணியா மாஞ்சோலைசேனை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இவருக்குப் போதைப்பொருள் பாவிக்கும் பழக்கம் இருப்பதோடு, இவர் நீண்டகாலமாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் என விசாரணையின் போது தெரியவந்துள்ளதாகவும், இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை தாங்கள் முன்னெடுத்து வருகின்றோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர் .

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# சாணக்கியன் போன்ற இளைஞர்களுக்கு கட்சிக்குள் முன்னுரிமை வழங்கவேண்டும்

## பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள்



தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் சாணக்கியன் போன்ற இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் நேற்று (வியாழக்கிழமை) ஊடகவியலாளர் சந்திப்பு மேற்கொண்ட போது அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

தமிழ் மக்கள் கூடத் தமிழ்த் தலைமைகளை ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. காரணம் அநேகமாக மக்கள் பிரச்சினை தீர்க்கப்படாமை ஆகும்.

எதிர்க்கட்சித் தலைவராக கடந்த காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இருந்து கொண்டு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு ஆதரவாக செயற்பட்டவர்.

இவ்வாறு தங்களது மாவட்டங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்காத தலைவராக இருந்து கொண்டு இருப்பதால் ஏனைய மாவட்டங்களைப் பற்றிச் சிந்திக்க மாட்டீர்கள்.

உங்களுக்கு வாக்களித்த மக்களையே மாவட்ட நிலையில் மறந்து வருகின்றீர்கள். எனவே தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டுக்கோப்பு இல்லாமல் போய் உள்ளது. இதற்கு காரணம் தலைமைத்துவம் தான். சரியான வழிநடத்தல் இன்மையால் தான் இந்நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சிக்கு மாத்திரம் உரித்தானது என கடந்தகால செயற்பாடுகள் சென்று கொண்டிருக்கின்றன.

இனிவரும் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒற்றுமையை ஏற்படுத்துவது என்பது சிரமம். இந்த பிரிவுகளை நீங்களாகவே ஏற்படுத்திக் கொண்டுள்ளீர்கள். 20 வருடங்கள் நம்பிக் கெட்ட பின்னர் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கின்றோம்.

கடந்த காலங்களில் தொழிலாளர் வர்க்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பி இருந்தது. ஏனெனில் கடந்த காலங்களில் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக இருந்தீர்கள். அந்தக் காலத்தில் மக்கள் உங்களை அங்கீகரித்திருந்தார்கள்.

நாங்களும் அந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் பின்னால் வந்தோம். ஒழுங்கான வழிநடத்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இன்மையால் தான் கடந்த 32 வருடங்களாக இணைந்து செயற்பட்ட நாம் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

நாங்கள் உண்மையில் தமிழ்த் தேசியத்தை மதிக்கின்றவர்கள், போராட்டங்களை மதிக்கின்றவர்கள், அண்ணன் பிரபாகரனின் போராட்டங்களைக் கூட மதித்திருக்கின்றோம். புலிகளோ அல்லது பிரபாகரனோ தற்போது இருந்திருந்தால் எமது தொழிற்சங்க உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலோ அல்லது மாகாண சபையிலோ உறுப்பினர்களாக இருந்திருப்பார்கள்.

ஏனெனில் எமது பாதை சரியானது. இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து கொள்ளவில்லை. எங்களைப் போன்ற ஒரு தலைவர்களை வழிநடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கவில்லை. ஆகவே தான் உலகத் தமிழ் மக்களும் தொழிற்சங்கங்களும் தற்போது ஆதரவை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வழங்குவதை குறைத்து வருகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்ளக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை வழிநடத்த வேண்டும். சாணக்கியன் போன்ற இளைஞர்களுக்கு கட்சிக்குள் முன்னுரிமை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

# இலங்கையை உதாரணமாக பார்க்கும் உலக நாடுகள்!

## இக்கட்டான நிலை தவிர்க்கப்பட்டதாக கூறும் பாகிஸ்தான்

இலங்கையைப் போன்ற ஒரு நிலை பாகிஸ்தானில் தவிர்க்கப்பட்டதாக பாகிஸ்தானின் நிதியமைச்சர் மிப்தா இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் போன்ற திவாலான நிலைக்கு செல்வது பாகிஸ்தானில் தவிர்க்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கணிசமான கொள்கை மாற்றங்கள் மற்றும் சிக்கன நடவடிக்கைகள் காரணமாக இலங்கையைப் போன்ற ஒரு நிலைமை தவிர்க்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எரிசக்தி இறக்குமதியின் அதிக விலை காரணமாக பாகிஸ்தான் நெருக்கடியின் விளிம்புக்கு தள்ளப்பட்டது. அதன் வெ நாட்டு நாணயக் கையிருப்பு 9.8 பில்லியன் டொலர்களாக குறைந்துள்ளது.

இது ஐந்து வார இறக்குமதிகளுக்குப் போதுமானதாக இல்லை. அத்துடன் இந்த ஆண்டு அமெரிக்க டொலருக்கு எதிராக பாகிஸ்தானிய ரூபா மிகக் குறைந்தளவு வரை பல வீனமடைந்தது.

எனினும் சர்வதேச நாணய நிதியம், கடந்த மாதம் பாகிஸ்தானுடன் பணியாளர்கள் அளவிலான ஒப்பந்தத்தை எட்டியுள்ளதன் மூலம், கோரப்பட்ட 600 கோடி டொலர் கடன் திட்டத்தில் 1.17 பில்லியன் டொலரை பெற்றுக்கொள்ள வழியேற்பட்டுள்ளது.

முன்னதாக பாகிஸ்தான் இலங்கையின் பாதையில் செல்லப்போகிறது என்று கவலை இருந்தது. எனினும் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்ததமையால், அந்தச் சூழ்நிலையைத் தடுத்துள்ளதாக பாகிஸ்தானிய நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே பாகிஸ்தான் இப்போது சரியான திசையில் செல்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அவசரகாலச் சட்டம் எதற்காக?

## ஹர்ஷ கேள்வி

நம்பிக்கை இல்லாத மற்றும் சர்வதேச பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத அரசாங்கம் எவ்வாறு பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியும் என ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இந்தக் கேள்வியை எழுப்பினார்.

மக்கள் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளதால் பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்த, அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய தேவை இல்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ்வாறான கூற்றின் பின்னணியில் உள்ள அர்த்தம் தொடர்பான கேள்வியெழுப்பிய ஹர்ஷ டி சில்வா, பொருளாதார சீர்திருத்தங்களைப் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளத் தவறினால் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்படும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. – என்றார்.

பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மக்களை ஏற்றுக்கொள்ள வைப்பதே பொருத்தமான தீர்வு என்றும் ஆகவே உண்மையை வெளிக்கொண்டு வந்து அவர்களின் ஆதரவைப் பெற்று இணைந்து செயற்படுமாறும் ஜனாதிபதியிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஓட்டோக்களுக்கான எரிபொருள் அளவில் மாற்றம் செய்தது அரசு!

கொழும்பு, ஒக. 12


முழுநேர போக்குவரத்தில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு அளவை அதிகரிப்பதற்கு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தீர்மானித்துள்ளார் .

இதேவேளை ஓட்டோக்களின் எண்ணிக்கை தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை 40 ஆயிரம் மெற்றிக் தொன் அடங்கிய மசகு எண்ணெய் கப்பலொன்று நாட்டை வந்தடையவுள்ளதோடு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 19 ஆம் திகதி முதல் மண்ணெண்ணெய் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சமீபத்தில் அமரத்துவமடைந்த கலைஞர்களின் நினைவுப் பகிர்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில்



சமீபத்தில் அமரத்துவம் அடைந்த கலைஞர்களின் நினைவுப்பகிர்தல் நிகழ்வு 2022.08.14 ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமரத்துவம் அடைந்த கலைஞர்களான எழுத்தாளர் மயிலாங்கூடல் பி.நடராசா, கதைசொல்லி மாஸ்டர் சிவலிங்கம், கல்வியியலாளர் ஆர். எஸ்.நடராசா, எழுத்தாளர் தெணியான் – கந்தையா நடேசு ஆகியோர்களின் அஞ்சலி உரையை முறையே எழுத்தாளர் இராஜி கெங்காதரன், எழுத்தாளர் வசந்தி தயாபரன், பேராசிரியர் தை. தனராஜ், வைத்தியகலாநிதி ச.முருகானந்தம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நன்றி உரையை கொழும்புத் தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் திருமதி வளர்மதி சுமாதரன் நிகழ்த்தவுள்ளார்.

# உணவுப் பொருள்களின் விலை மீண்டும் எகிறும் சாத்திய நிலை?

## உணவக உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

மீண்டும் உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கக் கூடும் என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். மின்கட்டண அதிகரிப்புடன், பல வகையான உணவு வகைகளின் விலைகளையும் உயர்த்துவதில் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும் எனவும் கூறினார்.

தயிர், ஐஸ் கட்டிகள், ஐஸ்கிறீம், குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்படும் பானப் போத்தல்கள், கோழி இறைச்சி உள்ளிட்ட பல வகையான உணவு மற்றும் பானங்களின் விலை அதிகரிக்கும் என்றும், மின்சார சபை அதிகாரிகளுக்கு வழங்குவதற்காக மக்களிடம் பெரும் மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும் அசேல சம்பத் மேலும் தெரிவித்துள்ளார்.

மின்சார சபை அதிகாரிகளுக்குத் தனியாரிடமிருந்து சொகுசு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கும், உப நிலையங்களுக்கான தனியார் கட்டடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கும் மின்சார சபை அதிகளவு பணம் செலவழிப்பதாக அசேல சம்பத் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை பருப்பு, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைவடைந்துள்ளதாக கூறப்பட்டாலும் உண்மையில் அவ்வாறு விலை குறையவில்லை எனவும், உணவகங்களில் உணவுப் பொருள்களின் விலைகள் மாறாமல் இருக்க வேண்டுமெனில் அந்தப் பொருள்களின் விலைகளைக் குறைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2022இல் வெளியிடப்பெற்றது.